# செய்தி அறிக்கை

வடகிழக்கு பருவமழை 28.10.2015 அன்று துவங்கி அதன் பின்னர் கனமழை பொழிந்ததன் காரணமாக அதிக பாதிப்புக்கு உள்ளாகிய சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் வெள்ளத்தின் காரணமாக தங்களது கல்விச் சான்றிதழ்களை இழந்த மாணவ/மாணவியர்கள் கல்விச் சான்றிதழ் நகல்களைப் பெறுவதற்கு ஏதுவாக 14.12.2015 முதல் இரண்டு வாரங்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கும் அம்மாணவ/மாணவியர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று ஒரு வாரத்திற்குள் கல்விச் சான்றிதழ் நகல்களை வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதற்கிணங்க, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கல்விச் சான்றிதழ்களை இழந்த சட்டம் பயின்ற/பயிலும் மாணவ/மாணவியர்கள் கல்விச் சான்றிதழ்களின் நகல்களைப் பெறும் பொருட்டு 14.12.2015 முதல் இரண்டு வாரங்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தி, அம்மாணவ/மாணவியர்களிடமிருந்து உரிய விண்ணப்பங்களைப் பெற்று, அவ்விண்ணப்பங்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு, மதிப்பெண் பட்டியல், கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் நகல்களை எவ்வித கட்டணமும் வசூலிக்காமல் மாணவ/மாணவியர்களுக்கு விண்ணப்பம் பெற்ற நாளிலிருந்து ஒரு வாரத்திற்குள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சீர்மிகு சட்டப் பள்ளியின் கீழ் இயங்கும் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் துறை, முதுகலை படிப்புகள் துறை, இளங்கலைப் படிப்புகள் துறை மற்றும் இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற சட்டக் கல்லூரிகளில் பயின்ற/பயிலும் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ/மாணவியர்கள் எவரேனும் கனமழை பொழிந்ததன் காரணமாக தங்களது கல்விச் சான்றிதழ்களை இழந்திருப்பின் அவர்கள் 14.12.2015 முதல் இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பயின்ற கல்லூரி அல்லது இப்பல்கலைக்கழக வளாகத்தில் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலகத்தின் மூலம் இதற்கென கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு பிரிவில் உரிய விண்ணப்பத்தினை சமர்ப்பித்து தாங்கள் இழந்த கல்விச் சான்றிதழ்களின் நகல்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

**பதிவாளர்(பொ)**

பெறுநர்:

(1) மாநில மக்கள் தகவல் அதிகாரி,
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்,
சென்னை **(செய்தித் தாள்களில் உரிய அறிக்கை வெளியிட வேண்டி)**

(2) நூலகர் (பொறுப்பு),
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்,
சென்னை **(இப்பல்கலைக்கழக இணையதளத்தில் அறிக்கை வெளியிட வேண்டி)**